**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.23 of 2019**

**Prosecution Witness: PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சக்திவேல் | **Caste** | : |
| **Father Name** | : கலியமூர்த்தி | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused absent. petition filed U/s.317 Crpc and allowed)**

**Dated.11.04.2023.**

**முதல் விசாரணை**

நான் திருப்பட்டுரில் வசித்து வந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கலியமூர்த்தியை எனக்கு தெரியும். கடந்த 14.12.2016 ம் தேதி கலியமூர்த்தி திருப்பட்டுரிலிருந்து எதுமலை நோக்கி இருசக்கர வாகனத்தில் செல்லும் போது இரவு 7.45 மணியளவில் எதுமலை கவுண்டர் தெரு அருகில் செல்லும் போது அவருக்கு எதிர்திசையில் 3 பேர் ஸ்கூட்டியில் வந்தவர்கள் கலியமூர்த்தி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கலியமூர்த்தியின் போனிலிருந்து எனக்கு தகவல் வந்தது. சம்பவ சமயத்தில் நான் திருச்சியில் இருந்தேன், சம்பவம் கேள்விபட்டு விபத்து நடைபெற்ற இடத்திற்கு நான் மறுநாள் காலை 8 மணியளவில் சென்ற போது போலிசார் சம்பவ இடத்தினை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர். அதில் நானும், சுப்ரமணி என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

எதிரி தரப்பில் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.23 of 2019**

**Prosecution Witness: PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுப்ரமணி | **Caste** | : |
| **Father Name** | : மருதை | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused absent. petition filed U/s.317 Crpc and allowed)**

**Dated.11.04.2023.**

**முதல் விசாரணை**

நான் திருப்பட்டுரில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கலியமூர்த்தியை எனக்கு தெரியும். கடந்த 14.12.2016 ம் தேதி கலியமூர்த்தி திருப்பட்டுரிலிருந்து எதுமலை நோக்கி இருசக்கர வாகனத்தில் செல்லும் போது இரவு 7 மணியளவில் எதுமலை கவுண்டர் தெரு அருகில் செல்லும் போது அவருக்கு எதிர்திசையில் வந்த இருசக்கர வாகனமானது கலியமூர்த்தி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. சம்பவ சமயத்தில் நான் திருப்பட்டுரில் இருந்தேன், சம்பவம் கேள்விபட்டு விபத்து நடைபெற்ற இடத்திற்கு நான் காலை 9 மணிக்கு சென்ற போது போலிசார் சம்பவ இடத்தினை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர். அதில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

எதிரி தரப்பில் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.